சென்னை சர்க்கார் வரவுசெலவுத்திட்டம்

4 கோடி ரூபாய் துண்டு விழுகிறது

சரிக்கட்டப் புது வரிகள் அட்டவணை

பருத்திக்கு ரூபாய்க்கு காலணாவரி

ஓட்டல், பகுத்தறிவுப் போட்டிகளுக்கும் வரிப்போட யோசனை

பஸ், வீட்டு வரியில் 'சர்சார்ஜ்' வசூலிக்கவும் எண்ணம்

கோபால ரெட்டியின் சாரமற்ற 'பட்ஜட்'

சென்னை, பிப். 27—

சென்னை சர்க்காரின் 1949—50 வரவு செலவு திட்டத்தில் 4 கோடி ரூபாய் துண்டு விழுகிறது; புதிய வரிகள் மூலம் இதைச் சரிக்கட்டக் கருதுவதாக நேற்று வரவு செலவுத் திட்டத்தைச் சட்ட சபையில் சமர்ப்பித்த நிதி மந்திரி கோபால் ரெட்டி கூறினார்.

தேங்காய், எண்ணெய் வித்து, கரும்பு, மிளகாய், காப்பி, ரப்பர், உருளைக்கிழங்கு, மிளகு, மஞ்சள், வாழைப் பழம் ஆகியவைகளைக் குடியானவர் விற்கும் பொழுது இனி வரி வசூலிக்கப்படும். மணிலா, முந்திரி விற்பனை வரி ரூபாய்க்கு காலணாவிலிருந்து 4½ பைசாவாக உயரும். பருத்திக்கும் இனி வரி விதிக்கப்படும். தேயிலை ஏற்றுமதிக்குள்ள சலுகை ரத்தாகும்.

விதிக்கப்படும் யோசனையிலுள்ள வரிகள்: முனிசிபாலிடி பேரிய பஞ்சாயத்துகள், சென்னை கார்ப்பரேஷன் ஆகியவைகளுக் குட்பட்ட ஸ்தாவர சொத்துக்களை விற்பவர்கள் 1938-ம் ஆண்டிலிருந்த விலைக்கும இப்போது விற்ற விலைக்கும் உள்ள வித்தியாசத்தில் 25 சத விகிதத்தை வரியாக கொடுக்க வேண்டும். பஸ் கட்டணம், முனிசிபல் வீட்டு வரி. ஆகியவைகளில் 12½ சத விகிதம் 'சர் சார்ஜ்' ஆக வசூல் செய்யப்படும்

ஸ்தல ஸ்தாபனங்கள் உட்பட மின்சாரம் உபயோகிக்கும் யாவரும் தனியாக வரி கொடுக்க வேண்டும்.

பகுத்தறிவுப் போட்டிகள், விளம்பரங்கள், காப்பி ஓட்டல்கள், சாப்பாட்டு ஓட்டல்கள், சினிமாக்கள் ஆகியவற்றிற்கும் வரி விதிக்கப்படும்.

இன்று சென்னை வரவு செலவு திட்டத்தை சட்டசபை—மேல்சபை ஆகியவைகளின் கூட்டுக் கூட்டத்தில் நிதி மந்திரி பி. கோபால ரெட்டி சமர்ப்பித்தார். இன்று பிரதமர் ஓமந்தூர் ராமசாமியுட்பட எல்லா மாகாண அமைச்சர்களும் வந்திருந்தனர்.

நிதி அமைச்சர் கோபாலரெட்டி மேற்படி பொறுப்பேற்றபின் இரண்டாவது முறையாக இன்று மேற்படி வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்தார்.

இட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் வரவு செலவு திட்டம்பற்றிய தனது பேசசை நிகழ்த்தினார்.

புது வரிகள் கண்டு நகைப்பு!

புது வரிகள் போட விருப்பது பற்றிய யோசனைகளை அவர் வெளியிட்ட பொழுது சபையில் சிரிப்பு ஏற்பட்டது. 1949-50-ம் ஆண்டுக்கான அவசரகால நடவடிக்கையே இந்த வரிகள் விதிப்பது என்று அவர் கூறியதும் மீண்டும் சபையில் சிரிப்பு ஏற்பட்டது.

தனது பேச்சை முடித்து விட்டு வெளியில் சென்றதும் அவர் பலரால் பாராட்டப்பட்டார்.

1949—50 வரவு செலவு

மொத்த வருமானம் (1) ரூ. 51,75,33
மொத்த செலவு (2) ரூ. 55,66,09
துண்டு விழுவது (2—1) — 39,0,77
புது வரிகள் மூலம் எதிர்பார்க்கும்
வருமானம் ரூ. 400,00
கடைசியில் மிச்சப்படக் கூடியது 9,23
(கணக்கு ஆயிர ரூபாய் எண்ணிக்கையில்)

எனவே அடுத்த ஆண்டு செலவு வருமானத்தை விட 39 கோடியே 77 ஆயிர ரூபாய அதிகமாகிறது. இதை ஈடுகட்டுவதற்காக புது வரிகள் போடப்போவதாக கோபாலரெட்டி அறிவித்து அதன் மூலம் 40 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுவதாகவும் வெளியிட்டார். புதுவரிகள் மூலம் 40 கோடி ரூபாய்வருமானம் சர்க்காருக்கு அதிகமானால் இறுதியில் மிச்சப்படக் கூடியது 9 லட்சம் 23 ஆயிரம் ரூபாய் ஆகும்.

புது வரிகள்

வரும் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஏற்படும் பற்றாக் குறையை ஈடு செய்ய அந்த ஆண்டுக்குமட்டும் அவசரகால நடவடிக்கையாக விதிக்கப்படும் புது வரிகள்:

கீழ்க்கண்ட பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயி அவைகளை விற்கும் பொழுது அந்த விற்பனைக்கு வரி விதிக்கப்பட்டது இதுவரை கிடையாது. இனி மேற்படி கீழ்க்கண்ட பொருள்களின் முதல் விற்பனையின் போதே (அதாவது அப்பொருள்களைச் சாகுபடி செய்பவர் விற்கும் பொழுதே) விற்பனை வரி விதிக்கப்படும்.

அப் பொருள்கள் :—

தேங்காய்
எண்ணை வித்துகள்
கரும்பு
மிளகாய்
காப்பி
ரப்பர்
உருளைக் கிழங்கு
மிளகு
மஞ்சள்
வாழைப்பழம்.

(ஆ) மணிலா, முந்திரி. மேற்படி பொருள்களுக்குள்ள விற்பனை வரி சரிபாதி உயர்த்தப்படும். அதாவது தற்போது ரூபாய்க்கு காலணாவாகவிருப்பது இனிமேற்படி காலணா மூன்று பைசாக்களாக வசூலிக்கப்படும்.

(இ) தேயிலை:—தேயிலையைப் பொறுத்த வரையில் இப்பொழுதே முதல் விற்பனையின் போது வரிவசூலிக்கப்பட்டுவருகிறது. ஆனால் ஏற்றுமதிச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. இனி இச்சலுகை ரத்து செய்யப்பட்டு ஏற்றுமதி வரியும் விதிக்கப்படும்.

(ஈ) பருத்தி:—பருத்திக்கு இதுபோது வரி இல்லை. இனிமேற்படி ஒரு 'தடவை' யில் மட்டும் ரூபாய்க்கு காலணா வரி வசூலிக்கப்படும்

புகையிலை விவகாரம்

புகையிலை மொத்த விற்பனையில் மாகாண சர்க்கார் வரி விதிக்காது இருக்கும் பொருட்டு ஆண்டுக்கு நஷ்ட ஈடாக இந்திய (மத்திய) சர்க்கார் 22 லட்சம் கொடுத்து வருகிறது. பிற பொருள்களுக்கு முன்னை விட இப்பொழுது வரிகள் அதிகமாக்கப்பட்டிருக்கும் நிலையில் தற்போதைய முறையை புகையிலைக்குமட்டும் நீடிக்க மாகாண சர்க்கார் விரும்பவில்லை ஆதலால் இது பற்றி இந்திய சர்க்காருடன் கடிதப் போக்கு வரத்து நடத்தி வருகின்றனர் மாகாண சர்க்கார்.

'சொத்து' மீது வரி

மேஜர் பஞ்சாயத்துகள், முனிசிபாலிடிகள், சென்னை கார்ப்பரேஷன், ஆகியவைகளுட்பட்ட வீடு, மனை முதலிய (ஸ்தாவர) சொத்துக்கள் விற்கப்பட்டால் அந்த சொத்தினுடைய மதிப்பு 1938 ம் ஆண்டில் என்னவோ அதற்கு அதிகமாகக் கிடைக்கும் தொகையில் 25-சத விகிதத்தை வரியாக வசூலிக்கப்படும். தற்போது விற்பவர் மேற்படி சொத்தை 1938 க்குப் பின் அவர் வாங்கியிருப்பாரேயானால் அப்பொழுது வாங்கப்பட்டவிலைக்கும் தற்போதவிற்கப்படும்விலைக்கும் இடையிலுள்ள லாபத்தொகையில் (வித்தியாசத்தொகை) 25 சத விகிதம் வரியாக வசூலிக்கப்படும்.

இந்த ஏற்பாட்டிக்குக்காரணம் கடந்த போருக்குப் பின் "தானாகவே" வீடு, மனை முதலாய பொருள்களின் விலைகள் உயர்ந்திருப்பதேயாகும் எனக் கூறப்படுகிறது.

பரிசீலனையிலிருக்கும் 'புது' வரிகள்

(1) மாகாணத்தில் ஓடும் பஸ் கட்டணங்களில் 12½ சதவிகிதம் 'சர்சார்ஜ்' ஆக விதிக்கப்படும். லாரிகளுக்கும் தக்க வரி விதிக்கப்படும்.

(2) முனிசிபாலிடி, பஞ்சாயத்துகள் ஆகியவைகளுக்கு செலுத்தப்பட்டுவரும் வீட்டுவரிகளில் 12½ சதவிகிதம் 'சர்சார்ஜ்' ஆக விதிக்கப்படுவது.

3) பகுத்தறிவுப் போட்டி, விளம்பரங்கள் ஆகியவைகளுக்கு வரி.

(4) காப்பி ஓட்டல்கள், சினிமாக்கள், சாப்பாடு ஓட்டல்கள் ஆகியவைகளும் தக்க வரி.

பரிசீலனையில் இருக்கும் மேற்படி வரிகள் விதிப்பது பற்றிய சட்டங்கள் கூடிய விரைவில் கொணரப்படுமென்றும் தெரிவித்தார் நிதிமந்திரி.

1949—50

1949—50-ம் ஆண்டு செலவுத் திட்டம்

★

வரவு செலவு திட்டப்படி 1949-50-ம் ஆண்டுக்கு பல இலாகாக்களின் சார்பிலும் திட்டமிடப்பட்டுள்ள செலவினம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. 1948-49-ம் ஆண்டு செலவினமும் தோழர்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காகத் தரப்பட்டுள்ளது.

	1949-50	1948-49
நிலவரி இலாகா	33,94,000	29,11,300
மாகாண கலால்	76,89,300	59,57,000
ஸ்டாம்பு	21,541,000	20,13,100
காட்டிலாகா	83,25,100	83,56,900
ரிஜிஸ்டிரேஷன்	50,16,800	50,76,700
மோட்டார் சட்டம்	5,48,900	5,13,500
பிறவரி இலாகாக்கள்	1,23,06,900	1,11,25,400
நீர்ப்பாசனம்	3,48,35,100	2,12,86900
சட்டசபைச் செலவு உயருகிறது!		
சர்க்காரின்தலைமை		
அலுவலகச்செலவு	49 95.600	53,71,800
சட்டசபைகள்	28,63,600	11,26,900
நீதி இலாகா	1,21,43,800	1,36 28,500
சிறைச்சாலை	6,04,54,000	6,40,49900
கல்வி இலாகா	9,40,29,800	8,21,77,900
மருத்துவம்	2,53,73,200	2,50,66,700
பொது சுகாதாரம்	1,00,17900	82,82,600
விவசாய இலாகா	1,36,22,600	1,68,78 600
கால் நடை மருத்துவம்	43,63,800	37,74,500
கூட்டுறவு	61,32,000	37 95,000
மீன் பிடித்தல் கோய்னா	48,72,700	45 71,200
கைத்தொழில் இலாகா	2,0,2 58 000	1,08,86,100
தொழில் இலாகா		
(ஆதித்திராவிடர் முன்னேற்றம்)	75 83,000	....
சில்லரை இலாகாக்கள்	46,44,100	1,07,17,000
மராமத்திலாகா (வொர்க்ஸ்)	4 81,81,900	4 97,55,400
மராமத்து (கட்டிடம்)	2,13,86:500	1,64,69,000
மராமத்து (மான்யங்கள்	58,03,100	58 61,700
மின்சாரம்	1,74 14,800	1,33,36,700
பஞ்ச நிவாரணம்	2,40.800	5,00,000
பென்ஷன்	1,64,52,000	1,56 69,900
அச்சு, காகிதம்	73,91,100	52,18,900
சில்லரைச் செலவினம்	2,84,25,800	6,74,20,500
சிவில் பாதுகாப்பு	....	50,500
மொத்தம்	55,28,43,300	55,08,87,200
முதலீடு வகைகளில். . .		
நீர்ப்பாசனத் திட்டங்கள்	3,96,86,200	3 72,88,400
கைத்தொழில் முன்னேற்றம்	1,07,93,400	85,03 400
மராமத்து வேலைகள்	1,15 73,500	78,73,100
மின்சார திட்டங்கள்	6,01,09,800	4,93,72,700
சில்லரைவகை மான்யம்	200	200
கடன்		
வட்டியில்லாத முன்பணம்	24,88,100	16,87,500
ஸ்தல ஸ்தாபனங்களுக்கு		
கடன்கொடுக்க	6,84,66,100	4,85,28,500
மொத்தம்	19,31,17,300	10,30,48,400
மொத்தக் கூட்டுப்புள்ளி	74,59 60,600	65,39,35,600

1948—49 வரவு செலவுத் திட்டம்

நடைமுறை ஆண்டு வரவு செலவு திட்டத்தைப்பற்றி நிதி அமைச்சர் பேசுகையில் பருவக்கோளாறு காரணமாக சில மாவட்டங்களில் அதாவது செங்கற்பட்டு தென்ஆற்காடு, ஆகியவைகளிலும் திருச்சி, ராமநாதபுரம், வட ஆற்காடு, சேலம் சித்தூர், அனந்தபுரம் கர்னூல், கடப்பா ஆகியவைகளின் பகுதிகளிலும் விளைச்சல் பாதிக்கப்பட்டிருப்பது குறித்துக் கூறினார்.

மேற்கூறியதன் விளைவாக நில வருமானத்தில் ஏற்படும் நஷ்டத்தை 1948 49-ம் ஆண்டைய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஈடு செய்ய வழிகாணப்பட்டிருக்கிறதென்றும் கூறினார்.

உணவுப் பிரச்னை

தற்போதைய நிலையில் மாகாணத்துக்கு 5 லட்சம் 60 ஆயிரம் டன் அரிசியும் 5 லட்சம் 70 ஆயிரம் டன் தானியங்களும் தேவை யெனக் கூறி இந்தப்பற்றாக்குறையைப் போக்க 10 லட்சம் டன் தான்யம் கோரி மத்திய சர்க்காருக்கு விண்ணப்பிக்கப் பட்டிருப்பதாகவும் கூறினார்.

சர்க்கார் நிர்வாகத்தில் போக்கு வரத்து

லாபப்புள்ளி காட்டுகிறார்!

சென்னை நகர பஸ் போக்கு வரத்தை இரண்டு ஆண்டுகளாக சர்க்காரே ஏற்று நடத்தியதால் கிடைக்கிற வருமானம் ரூபாய் 14,33000 என்று வெளியிட்டார். மொத்த வருமானம் ரூ. 77,19,000 என்றும் செலவு ரூ, 56,14,000 என்றும் அவர் கூறினார்.

வாழைப்பழ ஆராய்ச்சி நிலையம்

சர்க்காரின் ஐந்து ஆண்டுத் திட்டம்

நடைமுறை ஆண்டில் தஞ்சை மவட்டத்திலுள்ள மருதவர்குடியில் வாழைப்பழ ஆராய்ச்சி நிலையம் நிறுவுவதற்காக ஒரு ஐந்து ஆண்டுத் திட்டத்தை சுமார் ரூ. 1.89,000 செலவில் ஒரு திட்டம் போடப்பட்டுள்ளதாக கோபாலரெட்டி தகவல் தந்தார்.

★★★★★★★

ஆதித்திராவிடர் முன்னேற்றம்

உயர் நிலைப்பள்ளிகளில் படிக்கும் ஆதித்திராவிட மாணவர்களுக்கு பத்து ஆண்டுகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இனிமேற்படி கல்லூரியிலும் இந்த வசதி கிடைக்குமாறு செய்யப்படும்.

பிற்போக்கு வகுப்பினருக்கு சலுகை

கல்விக் கழகங்களில் பிற்போக்கு வகுப்பினர்கள் பாதிச்சம்பளச் சலுகை பெற அருகதை உண்டு. சர்க்கார் உதவிச் சம்பளத்தையும் அவர்கள் பெறலாம். இதற்கென நடைமுறை ஆண்டுக்கு ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்போக்கு வகுப்பினர் நலன்களுக்காக 1949-50 வரவு செலவு திட்டத்தில் 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்த பொதுத் தேர்தல்

1950-ல் நடைபெறும்?

செலவுக்கு 81 லட்சம் ஒதுக்கப்பட்டது

"1950 புது அரசியலமைப்புப்படி தேர்தல் நடைபெறுமென எதிர் பார்க்கப்படுவதால் அதற்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு ஆகியவைகளுக்கு 1948—49 ஆண்டுக்கும் 1949—50-ம் ஆண்டுக்கும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கவும் தேர்தலை நடத்தவும் ரூ 81 லட்சம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது. வாக்காளர் பட்டியல் 1949 ஜூனுக்குள் தயாராகிவிடலாம்" என வரவு செலவுப்பேச்சின் போது நிதிமந்திரி தகவல் வந்தார்.

நடக்க இருப்பவை

சென்னை:—5-வது தொகுதியைச் சார்ந்த திருவொற்றியூர்ப் பெருவழி, டாக்டர் விஜயராகவலு தெரு சந்திப்பில் சென்னை நகர சபையாரால் அமைக்கப்பட்டுள்ள இலவச வாசகசாலையை, 28-2-49 காலை 10-15 மணிக்கு மேல் மந்திரி வி. கூர்மையா திறந்து வைப்பார்.

அரியலூர்:-28—2—49 மாலை 4 மணிக்கு அரியலூர் உயர்நிலைப்பள்ளியின் தமிழ்ச் சங்கச்சார்பில் திருக்குறள் சொற்பொழி நடைபெறும். அதுபோது சட்டக்கலைஞர், திருக்குறள் முனிசாமி 'வள்ளுவர் வழங்கிய இன்பம்' என்பது பொருளாகப் பேசுவார்.

★★★★★★★

சென்னை.—13—2—49 அன்று மாத வாரத்தில் நடந்த கூட்டத்திற்கு முன்பு அங்குள்ள இயக்கத் தோழர்கள் சின்னப்பனின் பெண் மகவுக்கும் பகிமை தாசனின் ஆண் மகவுக்கும் பெரியார் அவர்கள் பெயர் வைத்தார்கள். இதன் நினைவாக 'விடுதலை' வளர்ச்சிக்கு ரூபாய் 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

தஞ்சை மாவட்ட திராவிட கழகத் தோழர்களுக்கு

தஞ்சை மாவட்ட திராவிட கழகத் தேர்தல் அதிகாரிகளாக மாவட்டக் கழகக் கூட்டுச் செயலாளர் தோழர் ஏ. முத்துக்கிருட்டிணன் மாவட்டக் கழக நிர்வாக உறுப்பினர் தோழர் வி. எஸ். பி. யாகுப் ஆகிய இருவரும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் 1-3-49 முதல் மாவட்டம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் 1949-ம் ஆண்டுக்கு தாலுக்கா கிராமக் கழகத்தேர்தல் நடத்துவதற்கும் கழகமில்லாத இடங்களில் புதிதாகக் கழகங்கள் ஏற்படுத்துவதற்கும் தோழர் வி. எஸ். பி. யாகுப் செல்வம் தெரு விசயபுரம் திருவாரூர் என்ற முகவரிக்கு முன் கூட்டி எழுதி ஏற்பாடு செய்து தேர்தல்களை 31-3-49 க்குள் நடத்தி மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தேர்தல்கள் முடிந்தவுடன் ஏப்ரல் முதல் வாரத்தில் நிதி வசூல் ஆரம்பிக்கப்படும்.

கே. கே. நீலமேகம்,
த. மா. தி. க. தலைவர்.

1944-ல் காணாமற் போன தங்கக்கட்டி!

பம்பாய் துறைமுகத்தில் அகப்பட்டது

ரூ 1,12000 மதிப்புள்ளது

பம்பாய் பிப் 23—

1944-ல் ஏற்பட்ட பம்பாய் துறைமுக வெடி விபத்தின் விளைவாக காணாமற் போனதாகக் கருதப்படும் தங்கப்பாளம் ஒன்று விக்டோரிய துறைமுகத்திலிருந்து எடுக்கப்பட்டது:

இந்தப்பாளத்தின் நிறை 28 ராத்தல். ரூ 1,12000 மதிப்புள்ளது

★★★★★★★

இந்திய சர்க்கார் 'நர்சரி' தோட்டம்

புது டேல்லியில் காட்கில் திறந்து வைத்தார்

புதுடில்லி, பிப். 24—

நேற்று ஹூமாயூன் மசூதிக்கருகில் இந்திய சர்க்காருடன் 'நர்சரி' தோட்டம் ஒன்றை தொழில் மந்திரி காட்கில் திறந்து வைத்தார். இந்தியாவிலேயே இது தான் பெரியதாக இருக்குமென்று கருதப்படுகிறது.

மேற்படி தோட்டம் கிட்டத்தட்ட 65 ஏக்கர்களை உடையது. மேற்படி இடம் அப்பது மாதங்களுக்கு முன்பு வெறும் மொட்டைக்காடாக இருந்ததாம்.

★★★★★★★

ராஜமகேந்திரபுரத்திற்குக் கல்லூரி

சென்னை, பிப். 26—

ராஜமகேந்திரபுரத்தில் ரூ. 2000000 செலவில் 10 ஆண்டு காலத்திற்குள் சிறப்பு சிறந்த ஒரு கல்லூரியைக் கட்டி முடிப்பதென்கிற திட்டத்தை சர்க்கார் சீக்கிரமே எடுத்துக்கொள்வர் என்று தெரிகிறது.

சென்னை ஸ்டான்லி மெடிகல் கல்லூரி, ஸ்டேன்லி ஆஸ்பத்திரி இவைகளில் சில அபிவிருத்திகள் செய்யப்படுமென்றும், சில ஹாஸ்டல் அறைகள் கட்டப்படுமென்றும், இவைகளுக்காக ரூ. 35,00,000 செலவிடப்படும் என்றும் தெரிகிறது.

பல்கலைக்கழகக் கமிஷன் அறிக்கை

டில்லி, பிப். 24—

இவ்வாண்டு செப்டம்பர் இறுதியில் பல்கலைக் கழக கமிஷன் அறிக்கை தயாராகிவிடும் எனத் தெரிகிறது.